22nd September 1956]

(c) whether copy of the report together with the decisions of the Government thereon will be placed on the table of the House?

THE HON. SRI A. B. SHETTY : (a) Yes, Sir.

(b) & (c) The Government have published the report and the Controller of Stationery and Printing has also been advised to supply a copy of the report to all the members of the Legislature. The Government are examining the report in consultation with the Registrar of Co-operative Societies.

SRI V. BALAKRISHNAN : Will this Hon. House be given an opportunity to express its opinion before the Government reach final conclusions on the report, Sir?

THE HON. SRI A. B. SHETTY : That would be considered in due course.

SRI P. K. GOPALAKRISHNAN : May I know whether the copies would be given to us before reorganization of the States takes place?

THE HON. SRI A. B. SHETTY : Yes, within a fortnight.

Digging of wells in Lower Bhavani Project area

* 171 Q.—SRI S. RAMALINGAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the ryots in the Lower Bhavani Project area are permitted to dig new wells in the ayacut; and

(b) if not, why not?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) There was a lot of underground seepage from the existing canal and distributaries due to the porous nature of the sub-soil, as a result of which the water table in the Lower Bhavani Project area has considerably risen. When there is copious supply in the wells, the ryots will naturally be induced to grow garden and other commercial crops and also paddy, requiring more water than normally allowed for the crops under the Project and the extra supply of water will be only at the expense of the legitimate supply to the non-well ayacut lands. When the number of wells is enormous, the cumulative effect of percolation on all the wells will be considerable. Having realised this and with a view to minimise the extra drawoff the Government have passed orders that no new wells or deepening of existing wells should be permitted in the project area until the project has been functioning for some years.

SRI K. R. NALLASIVAM : கிணறு வெட்டக் கூடாது என்று கூறப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட உத்தரவில் இந்த உத்தரவு சில காலம் வரையில் அமலில் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில காலம் வரையில் என்ருல் எத்தனை வருஷங்கள் வரையில்? எத்தனை வருஷங்களுக்குப் பிறகு கிணறு வெட்டுவது அனுமதிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

[22nd September 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : சில காலம் என்றால் சில காலம்தான், அதிக காலம் இல்லை. (சிரிப்பு.)

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாதம் 11-ம் தேதி இந்த விஷயம் சம்பந்தமாக பொது மராமத்து இலாகாவிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. கடைக் கோடி பிரதேசத்தில் (டெய்ல் எண்ட்) கிணறுகள் வெட்டுவதை அனுமதிக்க வேண்டும் என்று நான் போட்ட கடிதத்திற்கு வந்த பதில் அது. அந்த பதிலில் இந்த விஷயத்தை ரெவின்யூ இலாகா பரிசீலனை செய்துகொண்டுவருவதாகவும், சீக்கிரமே அவசியமான உத்தரவு போடப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. கடைக் கோடி பிரதேசத்தில் தண்ணீர் பாய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வாய்க்காலிலிருந்து ஆறு மாதங்களுக்குத்தான் தண்ணீர் விடப்படுகிறது. ஆகவே கடைக் கோடி பிரதேசத்திலாவது கிணறுகள் வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தால் வாய்க்காலில் தண்ணீர் வராத காலங்களில் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். இந்த விஷயத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து பதில் சொல்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கீழ் பவானித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் புஞ்சை தானியங்கள் அபிவிருத்தி அடையவேண்டுமென்பதுதான். கனம் அங்கத்தினர் கடைக் கோடி பிரதேசத்தில் கிணறுகள் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று கேட்டார். அது விஷயமாக அவருக்கு சர்க்கார் இடமிருந்து "இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது" என்று ஒரு தகவலும் வந்திருக்கிறது. பரிசீலனைக்குப் பிறகு இது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. VINAYAKAM : Sir, does not this kind of prohibition of sinking wells in the Lower Bhavani Project area amount to curtailment of individual liberty and thus infringe the fundamental rights of the ryots?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, while considering fundamental rights, we must also consider the fundamental object of the Project.

SRI V. BALAKRISHNAN : Sir, is there a storm brewing among the agriculturists in this area with regard to the imposition of the levy by Government, the prohibition by Government and bringing punjai lands under cultivation and if so will the Hon. Minister make a statement about the true position?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think the hon. Member's question will be covered by the next question.

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, கீழ் பவானி திட்டப் பிரதேசத்தில் வருஷத்தில் ஆறு மாதங்களில்தான் வாய்க்காலிலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. வாய்க்காலில் தண்ணீர் விடப்படாத ஆறு மாத காலத்தில் அந்தப் பிரதேசத்தில் கிணறுகள் வெட்டுவதால் வாய்க்கால் எப்படி பாதிக்கப்படும், வாய்க்காலில் தண்ணீர் இல்லாத காலத்தில் அந்த இடங்களில் கிணறுகள் வெட்டினால் வாய்க்கால் தண்ணீர் எப்படி இழுக்கப்படும் ? ஆகையால் அந்தப் பிரதேசத்தில் வாய்க்காலில் தண்ணீர் வாராதபோது கிணறுகள் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ? அப்படி அனுமதியை தற்காலிகமாகவாவது கொடுப்பதுபற்றி சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வாய்க்காலில் தண்ணீர் போதாத சமயத்திலும் அங்கே 'பெர்கொலேஷன்' தண்ணீர் இருக்கும்.

22nd September 1956]

அந்தப் பிரதேசத்தில் கிணறுகள் வெட்டினால் அப்போது அந்தத் தண்ணீர் இழுக்கப்படும். ஆகையால்தான் அங்கே கிணறுகள் வெட்டுவது தடுக்கப் படுகிறது. கடைக்கோடியிலுள்ள பிரதேசத்தில் மட்டும் கிணறுகள் வெட்டு வதற்கு அனுமதி கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி யோசிக்கலாம்; ஏனென்றால் அங்கே கிணறுகள் வெட்டப்பட்டால் வேறு யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள்.

Sri G. GOVINDAN: கனம் சபாநாயகர் அவர்களே, நீர்த்தேக்கத் திலிருந்து தண்ணீர் பெறும் புஞ்சை நிலங்களுக்குத் தண்டத் தீர்வை போடப்படும் என்று முன்பே சர்க்காரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீர்த் தேக்கத்திலிருந்து இல்லாமல், கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறும் புஞ்சை நிலங்களுக்குத் தண்டத் தீர்வை போடாமலிருப்பதற்கு சர்க்கார் யோசிப்பார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்போது கீழ் பவானி திட்டம் சம்பந்தமாகப் பேசுகிறோம். கனம் அங்கத்தினர் பொதுவாகக் கேட்கிறார் போலிருக்கிறது.

Sri C. KANDASAMY: கீழ் பவானித் திட்டப் பிரதேசத்தில் இருப்பது போன்று கிணறுகள் வெட்டப்படுவதைத் தடுக்கும் முறை புதிதாக மற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பிரதேசங் களிலும் அமல் நடத்தப் படுகிறதா? மற்ற இடங்களில் இம்மாதிரியான முறை அமலில் இல்லை என்றால் இங்கே மாத்திரம் ஏன் அமல் நடத்தப் பட வேண்டும்? இந்த விஷயத்தை ஒரு நிபுணர் (எக்ஸ்பர்ட்) கமிட்டி யின் மூலம் விசாரணை செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இந்தத் திட்டம் 'Dry crop project' என்று நான் ஏற்கனவே சொன்னேன். ஆகையால் தான் இந்தத் திட்டப் பிரதேசத்தில் இம்மாதிரியான நிபந்தனை போடப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் ஆரம்பத்திலிருந்தே 'Dry crop project' ஆக இருந்து வந்திருக்கிறது.

Sri S. DAIVASIGAMONEY: May I know whether the Government have actually, physically and scientifically examined the extent to which there is seepage and percolation water and if so, what is the area covered by seepage water? Are Government aware that by passing an order based on the presumption that there will be percolation, they are affecting the natural right of man to draw sub-soil water? Also may I know whether there is water underneath the earth?

The Hon. Sri M. A. MANICKAVELU: The difficulty now is that we are not exactly able to localize percolation area. That is why tentatively under the Project Scheme, an extent of 10,000 acres was earmarked for paddy cultivation. It now looks it will have to be extended. The Government are watching whether there is necessity to increase the ayacut of the wet area. It will certainly be done, but it takes time. Government are carefully watching how much to increase and what is to be done.

Sri V. R. NAGARAJAN: Was there any deputation to Government by ayacutdars of the Lower Bhavani Project and if so may I know at what stage the matter stands at present? May I know whether the Government are going to give them any relief? 9–40 a.m.

[22nd September 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. There was a deputation and representations were also made. The Revenue Minister also attended one conference there. He is aware of all the difficulties arising on account of this seepage of water.

SRI S. RAMALINGAM : லோயர் பவானி சாகர் திட்டத்தில் புஞ்சை தான்யத்தை பிரத்யேகமாகப் பயிரிட வேண்டுமென்று நடைமுறையில் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் சரிவர நடைபெற முடியவில்லை. அதனால் அங்குள்ள ரயத்துக்கள் அதை மாற்றி அமைக்க முற்படுகிறார்கள். அதனால் அந்த பிராஜெக்ட் ஏரியாவில் ஐஞ்சை புஞ்சை முறையில் நிலங்களை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி அளிக்க சர்க்கார் யோசனை செய்து ஃதற்கு வேண்டிய வசதி அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த திட்டம் ஒரு முக்கியமான திட்டம் என்று கருதப்படுகிறது. அதன் காரணமாக அங்கு ஏராளமான பருத்தி சாகுபடி செய்யமுடியும். அங்கு பருத்தி சாகுபடி செய்யப்பட வேண்டுமென்று தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இரண்டு லட்சத்து எட்டு ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கு உள்ளதாக இருக்கின்றன. அதனால்தான் அங்கு புஞ்சை சாகுபடி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் அங்கு நெல் சாகுபடி செய்யவேண்டுமென்றால் அந்த நோக்கம் போய்விடும். அங்கு இருக்கும் நிலைமையைப் பார்த்தால் கொஞ்சம் அதிக நெல் சாகுபடிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்போல் இருக்கிறது.

SRI K. R. NALLASIVAM : கனம் மந்திரி அவர்கள் அங்குள்ள திட்டத்தை பற்றி குறிப்பிட்டார். அங்குள்ள அடங்கல் கணக்கைப் பார்த்தால் அங்கே நஞ்சை சாகுபடிக்குத்தான் தீர்வை விதிக்கப்பட்டுவருவது தெரியும். நெல் விளைவிக்காமல் இருக்கும்போது அங்கு நஞ்சைத் தீர்வை விதிக்கப்படுவதால் விவசாயிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். அதை விசாரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து இதைப்பற்றி விசாரித்து ஒரு முடிவுக்கு வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கு அக்கிரமமாக நெல் பயிர் செய்தால் அதற்கு தண்டத் தீர்வையும் விதிக்கிறார்கள். அப்படிப் போட்டு விட்டு பிற்பட்டு அநேகமாக அதையும் ரத்து செய்து விடுகிறார்கள். ஜமாபந்தி காலங்களில் ரயத்துக்கள் மனுச் செய்து கொண்டாலும் சரி மனுச் செய்துகொள்ளாவிட்டாலும் சரி அப்படி போடப்பட்ட தீர்வையை ரத்து செய்துவிடுகிறார்கள். இதற்கு ஒரு தனி கமிட்டி நியமித்து அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்பது அவசியம் இல்லை. இதைப்பற்றியெல்லாம் அநேக மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த மனுக்களை பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

* 172 *Q.*—SRI K. R. NALLASIVAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have reduced the penalty imposed on the ryots in the Lower Bhavani Project Area during 1956 for the unauthorized cultivation of paddy in the area ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Representations have been received from the ryots under the Lower Bhavani Project, requesting the reduction of penalty imposed for unauthorized paddy cultivation in that area and the matter is under the consideration of the Government.